

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது முன்னாள் உதவியாளர் மறைந்த ஹரிகிருஷ்ணன் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினார். உடன் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. மாவட்டக் கழகச் செயலாளர் நே. சிற்றரசு ஆகியோர் உள்ளனர்.

## கழகத் தலைவரின் முன்னாள் உதவியாளர்

# ஹரி கிருஷ்ணன் மறைவு!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அஞ்சலி!

*சென்னை, ஆக.24-*

*கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னாள் உதவியாளரும் முன்னாள் அரசு மக்கள் தொடர்பு அதிகாரியுமான ஹரி கிருஷ்ணன் (வயது 81) நேற்று முன்தினம் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.*

*இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்னாரது இல்லம் சென்று மறைந்த ஹரி கிருஷ்ணன் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினார்.*

*மறைந்த ஹரிகிருஷ்ணன் அவர்கள் இளம்பிராயத்திலிருந்தே கழகத்தில் ஈடுபாடு கொண்டவர்.*

*1965-ல் நடைபெற்ற மொழிப் போராட்டத்தில் பங்கேற்று மாணவர் தி.மு.க.வில் தீவிரமாகப் பணியாற்றியவர்.*

*கரூர் மாவட்டத்தை பூர்வீகமாகக் கொண்ட ஹரி கிருஷ்ணன் பின்னர் அரசுப் பணியில் சேர்ந்து கடலூர் உள்ளிட்ட பல்*



*வேறு மாவட்டங்களில் மக்கள் தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றி வந்தார்.*

*பின்னர் அரசு வெளியீடான ‘தமிழரசு’ பத்திரிகையில் பணியாற்றி வந்தார்.*

*பேரவைத் தலைவராக தமிழ்க் குடிமகன் இருந்த பொழுது அவரது உதவியாளராக பணியாற்றினார்.*

*தொடர்ந்து கழகத் தலைவர் அவர்கள் சென்னை மாநகராட்சி மேயராக 1996-2001-ல் இருந்தபொழுது அவருக்கு உதவியாளராகவும் சென்னை மாநகராட்சி மக்கள் தொடர்பு அதிகாரியாகவும் பணியாற்றி வந்தார்.*

*பின்னர் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின் கழகத் தலைவர் அவர்களின் உதவியாளராகவும் பணியாற்றி வந்தார்.*

*பின்னர் உடல் நலக் குறைவின் காரணமாக அப்பணியிலிருந்து விலகி வீட்டிலிருந்து ஓய்வெடுத்து வந்தார்.*

*இந்நிலையில் நேற்று முன்தினம் (22.08.2026) காலை மயிலாப்பூர் இராஜா அண்ணாமலைபுரம் அய்யப்பன் கோவில் அருகிலுள்ள ரஹேஜா அபார்ட்மெண்டிலுள்ள தமது இல்லத்தில் இயற்கையெய்தினார்.*

*இச்செய்தியறிந்ததும் கழகத்தினரும் உறவினர்களும் மறைந்த அரிகிருஷ்ணன் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.*

*தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் அவரது சொந்த ஊரான கரூர் மாவட்டம் தரகம்பட்டி தாலுகா எருதிக்கோன் பட்டிக்கு கொண்டு செல்லப்பட்டு அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.*

## என் உழைப்புக்கு உறுதுணையாக,

# காலநேரம் பாராது - கண் துஞ்சாது பணியாற்றியவர்!

### ஹரிகிருஷ்ணன் மறைவு குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.24-

“என் உழைப்புக்கு உறுதுணையாக காலநேரம் பாராது, கண் துஞ்சாது பணியாற்றியவர் ஹரிகிருஷ்ணன்” என்று அவரது மறைவு குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

என்னுடைய உதவியாளராகப் பணியாற்றிய ஹரிகிருஷ்ணன் அவர்கள் மறைவெய்திய செய்தியால் மிகவும் மனம் வருந்தி நிற்கிறேன். அவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சென்னை மேயராகப் பொறுப்பு வகித்தபோது, மக்கள் தொடர்பு அலுவலராகப் பணியாற்றி, பின்னர் அந்தப் பொறுப்பிலிருந்து விருப்ப ஓய்வு பெற்று, என்னுடைய உதவியாளராக நெடுங்காலம் பணியாற்றியவர் அவர்.

என் உழைப்புக்கு உறுதுணையாக, காலநேரம் பாராது கண் துஞ்சாது அவர் பணியாற்றிய காட்சிகளெல்லாம் நினைவலைகளாய் என்னுள் எழுந்து, நெஞ்சத்தைக் கனக்கச் செய்கின்றன; துயரை அதிகரிக்கின்றன.

கடந்த சில ஆண்டுகளாகப் பணியிலிருந்து ஓய்வு பெற்றிருந்த அவர், அண்மையில் உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, இன்று நீடுதுயில் கொண்டு விட்டார்.

பழகுதற்கினிய குணம் கொண்ட ஹரிகிருஷ்ணன் அவர்களைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் என்னுடைய ஆறுதலை உரித்தாக்குகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# மாமல்லபுரத்தில் திடீர் கனமழை: சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி!

மாமல்லபுரம், ஆக.24-

மாமல்லபுரத்தில் நேற்று திடீரென பெய்த கனமழையால் சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர். மாமல்லபுரத்தில் கடந்த சில நாட்களாக கடுமையான வெயில் வாட்டி வதைத்தது. இதனால், பொதுமக்கள், மாமல்லபுரம் வரும் சுற்றுலாப் பயணிகள் அவதி அடைந்தனர். இந்நிலையில், மாமல்லபுரத்தில் நேற்று மதியம் திடீரென கருமேகங்கள் சூழ்ந்து சுமார் அரை மணி நேரத்திற்கும் மேலாக கனமழை பெய்தது. இதனால், திருக்கழுக்குன்றம் சாலை, கோவளம் சாலை, கிழக்கு கடற்கரை சாலை, ஒத்த வாடை தெரு, கடற்கரைக்கு செல்லும் சாலை உள்ளிட்ட இடங்களில் மழைநீர் சாலைகளை சூழ்ந்து வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது.

கனமழையால், சாலைகளில் வாகனங்கள் ஊர்ந்து சென்றன. மேலும், கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் மழையில் நனைந்தபடி வீட்டிற்கு சென்றதை காண முடிந்தது. மேலும், மாமல்லபுரம் சுற்றுலா வந்த பயணிகள் மழையில் நனையாமல் இருக்க வெண்ணெய் உருண்டை பாறையின் அடிப்பகுதியில் தஞ்சமடைந்தனர். மழை நின்றவுடன், மீண்டும் வழக்கம்போல் வெயில் வாட்டி வதைத்தது.

## கார் விஷயத்தில் அதிக வேகம் காட்ட வேண்டிய அவசியமில்லை!

# மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற அக்கறை காட்டிடுக!

### அரசுக்கு – ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

*சென்னை, ஆக. 24 -*

*கார் விஷயத்தில் காட்டும் வேகத்தை மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்ற காட்ட வேண்டும் என த.வெ.க. அரசுக்கு ‘தினகரன்’ நாளேடு - தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.*

*இது குறித்து 22.08.2026 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:*

*த.வெ.க. அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து வெளியிடப்படும் பல அறிவிப்புகள் பெரும் விவாதத்தையும், சர்ச்சையையும் கிளப்பி வருகின்றன. நிதி பற்றாக்குறை, அரசின் கடன் சுமையால் தங்களது தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளதை உடனடியாக நிறைவேற்ற முடியவில்லை என முதல்வர் விஜய் முதல் நிதியமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் தொடர்ந்து கூறி வருகின்றனர். இந்த சூழலில், அனைத்து எம்.எல்.ஏ.க்களுக்கும் புதிய கார், மாத பராமரிப்புக்கு ரூ.75 ஆயிரம் என தமிழக அரசின் அறிவிப்புக்கு*



தினகரன்

ஏனிந்த விரயம்?

*எதிர்ப்புகள் கிளம்பி யுள்ளன.*

*விவசாயிகள் பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி உள்ளிட்ட பல்வேறு மக்கள் நல கோரிக்கைகளில் போதிய ஆர்வம் காட்டாமல் உள்ள த.வெ.க. அரசு, தற்போது எந்த எம்.எல்.ஏ.வுமே கோராத கார் தருவதாக அறிவித்தது சட்டப்பேரவையில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. கார் அறிவிப்பு என்பதனாலோ என்னவோ, உடனே வரிசை கட்டி சொகுசு கார்கள் ஆய்வுக்கு வரத் தொடங்கி விட்டன.*

*இங்கே நாம் ஒரு விஷயத்தை கவனிக்க வேண்டும். ஒரு கார் மதிப்பீடாக ரூ.30 லட்சம் முதல் 35 லட்சம் வரை என கணக்கிட்டால், அதற்கே அரசுக்கு ரூ.70 கோடிக்கு மேல் தேவைப்படும். இதுபோக கார் பராமரிப்பு ரூ.75 ஆயிரம் என கணக்கிடும்போது, அதற்கே ஆண்டுக்கு சுமார் ரூ.21 கோடி தேவைப்படும். 5 ஆண்டுகள் கணக்கிட்டால் சுமார் ரூ.105 கோடி தேவை. தொடர்ந்து நடக்கும் பேரவையில் பல்வேறு முக்கிய விவாதங்கள் நடக்கும்போது, நிதிச் சுமையை காரணமாக கூறி மறுக்கும் அரசு, கார் விஷயத்தில் அதிவேகம் காட்ட வேண்டிய அவசியம் புரியவில்லை.*

*சுமார் 90 சதவீதம் வரையிலான எம்.எல்.ஏ.க்கள் சொந்தமாக கார் வைத்துள்ள நிலையில், புதியதாக கார் தர வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வியும் எழுந்துள்ளது. மாநிலத்தின் நிதிச்சுமையை கருத்தில்கொண்டு, 59 தி.மு.க. எம்.எல்.ஏ.க்களும் கார் வேண்டாமென, தலைவர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி ஒருமனதாக முடிவெடுத்துள்ளதாகவும், அதற்கு பதிலாக பொருளாதாரரீதியாக நலிவடைந்தவர்களுக்கு கார் வழங்க வேண்டுமென எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் நேற்று பேரவையில் தெரிவித்தார்.*

*பா.ம.க. மற்றும் த.வெ.க. அரசுக்கு ஆதரவு அளித்து வரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இதே கருத்தை வலியுறுத்தியுள்ளன. அறிவிப்பு தங்கள் மீதே ஏவுகணையாக பாயுவதை அறிந்த அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, ‘கார் உள்ள த.வெ.க. எம்.எல்.ஏ.க்கள், கார் கேட்க மாட்டார்கள்’ என்று சமாளித்தார். அரசியல் கட்சி தலைவர்கள் தரப்பிலும் இதற்கு கண்டனம் எழுந்துள்ளது.*


*இது அரசை விமர்சிக்காமல் இருப்பதற்காக எம்.எல்.ஏ.க்களுக்கு வழங்கும் லஞ்சமா என நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், மக்களின் வரிப்பணத்தில் இருந்து ஒரு பைசா கூடத் தொட மாட்டோம் என்று கூறிவிட்டு, தற்போது மக்களின் பணத்தில் எம்.எல்.ஏ.க்களுக்கு கார் வழங்குவது ஏன் என அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டிடிவி. தினகரன், கூறியுள்ளார்.*

*பருவமழை பொய்த்ததால் ஏற்பட்ட வறட்சி காரணமாக டெல்டா உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் விவசாயம் அடியோடு படுத்து விட்டது. இதனால் அரசு முழுமையாக பயிர்க்கடனை தள்ளுபடி செய்ய வேண்டும்; தேர்தல் அறிக்கையில் கூறியபடி ரூ.2,500 மகளிர் உரிமைத்தொகை வழங்க வேண்டும். புறநகர் பேருந்துகளிலும் பெண்களுக்கு இலவச பயணம் உள்ளிட்ட எண்ணற்ற கோரிக்கைகளைப் பற்றி த.வெ.க. அரசு கவனத்தில் கொள்ளவில்லை. எனவே, மக்களுக்கான அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதில் த.வெ.க. அரசு, முதல் அக்கறை காட்ட வேண்டுமென தமிழக மக்கள் தெரிவிக்கின்றனர்.*

*இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.*

## சிந்தனையைத் தூண்டிய திராவிட எழுத்துகள்

# எது நம் திருமண முறை?




‘தமிழர் திருமணமும் இனமானமும்’ என்ற தலைப்பில் வெளியான நூலில் இனமானப் பேராசிரியர் க.அன்பழகனார் அவர்கள் எழுதியுள்ள கருத்துகள் திராவிட இயக்கம் முன்னெடுத்த சுயமரியாதை இயக்கத்தின் சிறப்பையும், அதனால் ஏற்படக்கூடிய நல்வாழ்வையும் எடுத்துக் காட்டுகிறது.

புரோகிதத் திருமணங்களின் தன்மை என்ன என்பதை விளக்கிய பிறகு, தமிழர் மரபைப் போற்றும் சுயமரியாதைத் திருமணம் குறித்து பேராசிரியர் அந்த நூலில் விளக்குகிறார்.

புரோகிதத் திருமணச் சடங்குகள் பலவும் ஒரு வழக்கமாக இடம்பெற்று வருபவை. ஆதலின் அது எதற்காக என்பதோ, அதன் கருத்தோ, நோக்கமோ, பயன் யாது என்பதோ விளங்குவதில்லை. வடமொழியில் கூறப்படும் ‘மந்திரம்’ தமிழர்கட்கு விளங்காத நிலையில், அந்த மந்திரம் எதுவும் விடப்படாமலோ, தவறு நேராமலோ கூறப்பட்டதா என்பதையும் எவரும் அறிய முடிவதில்லை. வைதிக முறையில் முன்னர் நிகழ்ந்த திருமணங்கள் பலவற்றில் நடைபெற்ற சடங்குகளை நினைவிற்கொண்டே பலரும் திருமணச் சடங்குகள் நிறைவேறியதாக எண்ணிக் கொள்வர்.

பரபரப்பு மிகுந்த இக்காலத்திலோ எவரும் சடங்குகளைப் பற்றி ஆர்வம் கொள்வதில்லை. புரோகிதர் ஏதோ மந்திரம் கூறுவார், மணமக்களுக்கு மணமகன் ‘தாலி’ கட்டுவார். மணமக்கள் அக்னி வலம் வருவார்கள். அந்த அளவில் திருமணம் நிறைவேறியது என்று சொல்வது அன்றி சடங்கு முறைகளைப் பெரிதாகக் கருதுவதில்லை. ‘சடங்குகளை’ ஒட்டுமொத்தமாக கைவிடத் துணியாதவர்களும்கூட சடங்கு என்றாலே பொருளற்றது, பயனற்றது, வீண் வேலை என்று எண்ணும் நிலை காலப்போக்கில் வளர்ந்து வருகிறது. ஆனால், புரோகிதர்களோ தங்கள் தொழிலையும், குரு நிலையையும் காத்துக் கொள்ளவே அந்தச் சடங்குகளை விரிவாகச் செய்து வைப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

மணமக்களுக்கு எதிரில் புரோகிதர் ஓமாக்கினியை வளர்ப்பார். அதிலிருந்து எழும் புகை சில நேரங்களில் மணமக்களுக்குக் கண் எரிவதையும் மூச்சு திணறலையுங்கூட ஏற்படுத்தும். ஒரு திருமணத்தில் மணமகள் இந்த ஓமப் புகைச்சலால் கண்ணைக் கசக்கிக்கொண்டே இருந்ததைக் கண்டவர்கள் “அந்தப் பெண்ணுக்கு இந்த மணமகளை ஏற்க விருப்பம் இல்லை. அதனால் தான் கண்ணீர் சிந்துகிறாள்” என்று பேச முற்பட்டு, அது பலரிடமும் பரவி, மண உறவு கொண்ட இரு வீட்டாரிடையிலும் ஒரு மாறுபாட்டினை உருவாக்கிவிட்டது.

இவ்வாறு புரோகிதத் திருமணத்தின் நடைமுறையை விளக்கும் இனமானப் பேராசிரியர் அவர்கள், தமிழர் வாழ்வியலுக்கேற்ற சுயமரியாதைத் திருமணம் எப்படிப்பட்டது என்பதையும் தெளிவாக விளக்குகிறார்.

சீர்திருத்த நோக்கத்தை ஏற்றவர்கள், திருமணத்தை மிகவும் சிக்கனமாக நடத்த முடியும். ஒரு தலைவர், இரண்டு பூமாலைகள் அளவில் செலவை சுருக்கமாகவும் செய்யலாம். அதற்கு மேற்பட்டவை எல்லாம் அவரவர் வசதி வாய்ப்பு செல்வாக்கு ஆகியவற்றையும் உறவினர், நண்பர்கள், தொடர்புடையோர் எண்ணிக்கையையும் பொருத்ததாகும்.

இத்திருமண நிகழ்ச்சிக்குப் பெருந்தொகை செலவு செய்ய இயலாதாரும், மாத ஊதியத்தைக் கொண்டே வாழ்க்கையை நடத்துவோரும், செலவையும் திருமண வேலைகள் பலவற்றையும் குறைத்திடப் பதிவுத் திருமணம் செய்வதும் விரும்பத்தக்கதே . மணமக்களின் நெருங்கிய குடும்பத்தாரும் நண்பர் சிலரும் கலந்து கொண்டாலே போதும்.

கோவை அதிபரும் தொழிலதிபருமாக விளங்கிய ஜி.டி.நாயுடு அவர்கள் பகுத்தறிவுச் சிந்தனையாளர். பெரியாரின் நண்பர். அவர் தம் மகளுடைய திருமணத்தை 50 ஆண்டுகட்கு முன்னர் நடத்திய போது விழாவிற்கு அன்றைய ஆளுநர் தலைமை வகித்தார். மணமகள் எளிய குடும்பத்துப் பெண்ணைப் போன்று குறைந்த விலையுள்ள கூறைப்புடவை கட்டியிருந்தார். மணமகனும் பருத்தி ஆடையே உடுத்தியிருந்தார். மணமக்கள் ஒருவருக்கொருவர் மோதிரம் அணிவித்துத் திருமணம் செய்துகொண்டனர். திருமணத்தில் நாதசுரங்கூட முழங்கவில்லை. அந்தத் திருமண அழைப்பிதழில், அனைவருக்கும் உணவு ஏற்பாடு செய்யப்படவில்லையாதலின், பகல் உணவுகொள்ள விரும்புவோர் முன்னதாகத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது.

எவ்வளவு வேண்டுமாயினும் செலவிடக்கூடிய வாய்ப்பும் செல்வாக்கும் மிக்க நாயுடு அவர்கள், அந்தக் காலத்திலேயே தம் மகள் திருமணத்தை மேளங்கூட ஏற்பாடு செய்யாமல் எல்லோரையும் விருந்துக்கு அழைக்காமல், சீர்திருத்த முறையில் சிக்கனமாக நடத்தியது பலராலும், வியந்து பேசப்பட்டது. மணவிழா என்பது குடும்பத்துக்குப் பெருஞ்செலவாக அமையும் முறையால் பல மணமக்கள், திருமணத்துக்குப் பின் வாழ்க்கையில் இடர்பட நேரிடுகிறது என்பதைக் கருதியே அவ்வாறு செய்து காட்டினார் என்பது உணரப்பட வேண்டும் என்று சீர்திருத்த திருமண முறையின் சிறப்பையும் சிக்கனத்தையும் ‘தமிழர் திருமணமும் இனமானமும்’ என்ற நூலில் இனமானப் பேராசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.